இந்து சமய அறநிலையத்துறை, ஆணையரின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர்

செ.மு.ந.க.எண்.58798/2018/பி.5 நாள்.26.09.2022

பொருள்: பணிப்பிரிவு – இந்து சமய அறநிலையத்துறை – திரு.எம்.ஜெயப்பிரகாஷ், உதவியாளர், ஆணையர் அலுவலகம், சென்னை – உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் – ஆணை பிறப்பிக்கப்படுகிறது

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடித எண்.6022/பிஎஸ்டி–எச்/2015, நாள்.01.11.2018
2. இவ்வலுவலக செ.மு.ந.க.எண்.58798/2018/பி.5, நாள்.28.11.2018
3. இவ்வலுவலக ந.க.எண்.58798/2018/பி.5, நாள்.14.10.2019
4. மாநில கூர்ந்தாய்வு குழு, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9, செ.மு.எண்.1833/சிவி–3(2)/2019–7, நாள்.24.08.2022.
5. திரு.எம்.ஜெயப்பிரகாஷ், உதவியாளர், இவ்வலுவலகம், விண்ணப்ப நாள்.14.09.2022.

*******

திரு.எம்.ஜெயப்பிரகாஷ், உதவியாளர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் உதவியாளராக நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்டு ஆணையர் அலுவலகத்தில் 05.12.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். அன்னாரின் சாதிச்சான்று மெய்த்தன்மை தொடர்பாக மாநில கூர்ந்தாய்வுக் குழு மூலம் சான்று பெற்ற பின்னரே அன்னாருக்கு உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட வேண்டும் எனவும், இதுகுறித்து அன்னாருக்கு வழங்கப்படும் பணிநியமன ஆணையில் தெரிவிக்கவும் தேர்வாணையத்தால் பார்வைக் குறிப்பு 1ல் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி திரு.எம்.ஜெயப்பிரகாஷ்,

உதவியாளரின் சாதிச்சான்று குறித்த மெய்த்தன்மைச் சான்று பெற்றப் பிறகே அன்னாருக்கு உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்ய இயலும் எனத் தெரிவிக்கப்பட்டு உதவியாளராக பார்வைக் குறிப்பு 2ன்படி இத்துறையில் பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

2) திரு.எம்.ஜெயப்பிரகாஷ், உதவியாளரின் சாதிச்சான்று தொடர்பாக கடந்த 02.08.2022 அன்று மாநில கூர்ந்தாய்வுக் குழுவினர் முன்னிலையில் அன்னாரால் அளிக்கப்பட்ட "குருமன்ஸ்" என்ற சாதிச்சான்று குறித்த விசாரணை நடத்தப்பட்டு அன்னாரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை சரிபார்க்கப்பட்ட பின்னர் அன்னாரால் அளிக்கப்பட்ட சாதிச்சான்று உண்மையானது என சான்று வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சான்றின் அடிப்படையில் தமக்கு உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்புமாறும் பார்வைக்குறிப்பு 2–ல் திரு.எம்.ஜெயப்பிரகாஷ் விண்ணப்பம் அளித்துள்ளார்.

3) பார்வைக் குறிப்பு 4–ல் காணும் உத்தரவில் திரு.எம்.ஜெயப்பிரகாஷ், உதவியாளரின் சாதிச்சான்று குறித்து கடந்த 02.08.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் தனியரால் அளிக்கப்பட்ட அசல் சான்றுகள் சரிபார்க்கப்பட்டதாகவும், மாநில கூர்ந்தாய்வுக் குழுவினரின் கருத்துக்களின்படி திரு.எம்.ஜெயப்பிரகாஷ், உதவியாளருக்கு "குருமன்ஸ்" பழங்குடி வகுப்பினர் என அரூர் வருவாய் கோட்ட அலுவலரால் சான்று எண்.262397 RDis.No.4952/2008/அ5, நாள்.30.06.2008 அன்று அளித்த சாதிச்சான்று மெய்த்தன்மை உடையது எனச் சான்று அளிப்பதாகவும் மாநில கூர்ந்தாய்வுக் குழுவினரால் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

4) திரு.எம்.ஜெயப்பிரகாஷ், உதவியாளருக்கு "குருமன்ஸ்" என்று வழங்கப்பட்ட சாதிச்சான்றின் மெய்த்தன்மை மாநில கூர்ந்தாய்வுக் குழுவினரால் ஏற்கப்பட்டுள்ளதால் திரு.எம்.ஜெயப்பிரகாஷ், உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 05.12.2018 முற்பகல் முதல் உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

5) திரு.எம்.ஜெயப்பிரகாஷ், உதவியாளர் பதவியில் 05.12.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து அன்னாருக்கு அனுமதிக்கப்பட வேண்டிய வருடாந்திர ஊதிய உயர்வுகளுக்கான நிலுவைத் தொகைகளை பெற்று வழங்கிட உதவிக் கணக்கு அலுவலருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

ஒம்/-ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உண்மை நகல்/ உத்தரவுப்படி/

27/9/22
கண்காணிப்பாளர்

27/9/2022

பெறுநர்

1. திரு.எம்.ஜெயப்பிரகாஷ், உதவியாளர், இவ்வலுவலகம்
2. உதவி கணக்கு அலுவலர், இவ்வலுவலகம்.
3. பட்டியலுக்கு
4. பணிப்பதிவேட்டிற்கு
5. சம்பளக்கணக்கு அலுவலர்(தெற்கு), சென்னை-600035.
6. எப் - பிரிவு, இவ்வலுவலகம் (எண்ணிடல் மூலம்) (இணைப்பு வ.எண்.2,3 மற்றும் 5)
7. மிகை.